


சென்னையில் பள்ளி மாணவர்களுக்கான சதுரங்க விளையாட்டு பயிற்சி முகாமை உலக சாம்பியன் விஸ்வநாதன் ஆனந்த் தொடங்கி வைத்தார்.

# பள்ளி மாணவர்களுக்கு சதுரங்க விளையாட்டு பயிற்சி

**வேளச்சேரி, மார்ச் 17–** சென்னை மேல்அயனம்பாக்கத்தில் உள்ள வேலம்மாள் வித்யாலயா பள்ளி சார்பில், பள்ளி மாணவர்களுக்கு சதுரங்க விளையாட்டு பயிற்சி முகாம் நடத்தப்படுகிறது. இன்று முதல் 3 நாட்கள் சென்னை வேளச்சேரியில் உள்ள நட்சத்திர ஓட்டலில் முகாம் நடக்கிறது. உலக சாம்பியன் வென்ற இந்திய சதுரங்க வீரர் விஸ்வநாதன் அனந்த். முகாமில் மாணவர்களுக்கு ஆலோசனை வழங்கி பயிற்சி அளிக்கிறார்.

இன்று காலை நடந்த விழாவில் விஸ்வநாதன் ஆனந்த் குத்துவிளக்கேற்றி பயிற்சி முகாமை தொடங்கிவைத்தார். அப்போது அவர் பேசுகையில், "மாணவர்கள் சதுரங்க விளையாட்டை தினந்தோறும் விளையாடுவதால் அவர்களுக்கு நினைவாற்றல் வளரும். கற்றல் திறன் அதிகரிக்கும். கல்வியில் சிறந்து விளங்குவார்கள். மாணவர்களுக்கு பயிற்சி அளிப்பதன் மூலம் என்னுடைய அனுபவங்களை பகிர்ந்துகொள்ள வாய்ப்பு கிடைத்துள்ளது. சிறந்த சதுரங்க வீரர்களை உருவாக்க தொடர்ந்து பயிற்சி அளிப்பேன்" என்றார்.

பள்ளி டீன் மீரா, துணை முதல்வர் தசரத ராஜன் மற்றும் சதுரங்க பயிற்சி பெறும் பல்வேறு பள்ளி மாணவர்கள் கலந்து கொண்டனர்.